Reg No. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

| | | |
|---|---|---|
| Bureau de la Direction:— RUE D'AMBALATADOU AYER MADAM NO. 4, Pondichery. | நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும் வித்தகர்க் கல்லா லரிது. குறள். | காரியாலயம்:— அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி நெ. 4, புதுவை. |

VOL. I. புதுவை, பவ-ஹு ஐப்பசி-மீ௴ ௯ ௨ (25-10-34) No. 48.

## திருமந்திரம்

அம்பல மாடரங் காக வதன் மீதே
யெம்பர னாடு மிருதாளி னீரொளி
யும்பர மாமைந்து காதத்து ரேகையுட்
டம்பத மாய்நின்று தான்வந் தருளுமே.

ஆடிய காலு மதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே.

இருதயந் தன்னி லெழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
வரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்
குரவனு யெங்கணுங் கூத்துகந் தானே.

குருவுரு வன்றிக் குனிக்கு முருவ
மருவுரு வாவது மந்த வருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளு
முருவரு வாகு முமையவ டானே.

கூத்தன் கலந்திடுங் கோல்வளை யாளொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா வானந்தங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்ததின் மேலே.

இடங்கொண்ட சத்தியு மெந்தை பிரானு
நடங் கொண்டு நின்றமை நானு மறிந்தேன்
படங்கொடு நின்றவிப் பல்லுயிர்க் கெல்லா
மடங்கலுந் தாமாய்நின் றாடுகின் றாரே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)


# வித்தகம்

புதுவை,

பவ-ஷு ஐப்பசி மீ 9உ


## சண்டேசுரப்பேறு

சைவ சமயிகள் எனப்படுவோரால் செய்யப்படும் ஆன்மார்த்தம் (சிவ பூசை முதலியன) பரார்த்தம் (ஆலயக் கிரியை) என்னும் கிரியைகளின் இறுதியில் சண்டேசுர பூசை விதிக்கப்பட்டுள்ளது. ஆலயங்களிலும் உத்தர பாகத்தில் சண்டேசுரப் பிரதிட்டை அமைய வேண்டியது ஆகம விதி. ஆலய வழிபாடு செய்வோரும் இறுதியில் சண்டேசுரரை வணங்கித் தமது வழிபாட்டுப் பலனை வேண்டிக்கொள்வர். இவற்றால் பெறப்படுவது யாது? வீடு பேற்றிற்குரிய எல்லாக் கிரியைகளாலும் சாதகங்களாலும் முக்கியமாக அடைய வேண்டியது சண்டேசுரப் பேறே என்பதாகும். இவ் அரிய பெரிய பேற்றை அடைந்தோர்க்கே வீடு பேறு எளிதாகும்—உரியதாகும் என அறிதல் வேண்டும். இதுவே சிவப்பிரசாதம் பெறுதற்குரிய பதம் என்பது சிவ நின்மாலியங் கொண்டு சண்டேசுர பூசை செய்யப்படுதலால் நன்று வலியுறுதல் கண்டு கொள்க. வீடு பேற்றிற்கு எனச் சமைந்தான் ஒவ்வொருவனும் சண்டேசுரப் பேற்றை—இத்தகைய பேருகிய முத்தி வாசலை அடைந்தே ஆகவேண்டும். ஆன்மார்த்தமும் பரார்த்தமுமாகி அமைந்த சமயக்கிரியைகள் எல்லாம் அரிய பெரிய தத்துவங்களை உணர்த்தும் அறிகுறிகளே — கற்பனைகளே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

### அப்பர்தேவாரம்

குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரண மோதினும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே.

(ஷை தனித் திருக்குறுந்தொகை செ. 6)

இச் சண்டேசுரப் பேறு என்பது யாது? இதனைப் பெறுதல் எவ்வாறு? இதனால் ஆம் பயன் என்னை? என்பனவே இச் சிறிய கட்டுரையில் ஒருவாறு சுருங்கஉரைப்பான்எடுத்துக்கொண்ட பொருளாகும். உலகில் நூல்களாகி வழங்கும் ஆகமங்களில் சண்டேசுரப் பிரதிட்டையானம்பூசை முதலியன கூறப்பட்டுள்ளன. இப்பேற்றை அடையும் நெறி முத்திநெறிக்கெனச் சமைந்த பக்குவ சீவருக்கே அவரவர் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்பச் சற்குரு நாதனால் போதிக்கப்படுவனவாதலின் இந் நூல்கள் அவற்றைக் கூறுவனவாகா. சண்டேசுர பதவி என்பது மெய்யடியாரால் அடையப்படும் ஒருநிலை என்பதும் இந் நிலை அடையப் பெற்றோரே சிவப்பிரசாதம் பெற்றவர் என்பதும் இதன் இலக்கணமும் தத்துவப் பெரியார் அருளிய வேத நூல்களில் நிறை முறை அமைந்த உண்மைக் கற்பனைகளால் கூறப்பட்டுள்ளன. இக் கற்பனைகளின் உண்மைப் பொருளை அறிதல் எளிதன்று. எனினும் அத்தகைய திருவாக்குக்கள் சிலவற்றை ஈண்டுக் காட்டி ஒரு சிறிது விளக்கு முகத்தால் சண்டேசுரப் பேற்றின் இயல்பு ஒருவாறு உணர்த்தப்படும்.

### திருவாசகம்

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானை
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளி
[ரண்டுஞ்
சேதிப்ப வீசன் திருவருளாற் றேவர்
[தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

(ஷை திருத்தோணோக்கம் செ. 7)

[மாணி—பிரமசாரி. சிவகருமம்—சிவம் என்னும் அமலஒளி ஆக்கமுறச் செய்தற்குரிய சாதகம். சிதைத்தானை தாதையைதாள் இரண்டும் சேதித்தல் என்பது — சிவம் ஆக்கமுறுதற்குத் தடையாய் உள்ள அசுத்த நிறையை அழித்தல். சேதிக்கப்பட வேண்டியது அதுவேயாம். தாதைதாள் என்பன விந்துவில் உள்ள கலைகளாகிய வேதங்களாகலின் "சாதியும் வேதியன்" என்று கூறப்பட்டது. இக்கலைகள் அசுத்தம் நீங்கப்பெறுதலே சேதித்தல் என்பது. உடல் வகரமாகிய வாயு பூதத்தால் ஆயது. ஆதலின் "சாதியும் வேதியன் என்றார். (வ + ஏதம் = வேதம்) உடல் வேதம் எனப்படும். வாய்மையான சாதகங்களால் அசுத்த நிறையைச் சேதித்தலால் அமிர்தத்துவம் ஆகிய நித்தியத்துவம் உளதாயிற்று என்பது போதர "பாதகமே சோறு பற்றினவா" என்றுகூறப்பட்டது. சோறு—அமுது நித்தியத்துவம். கேடே ஆக்கமாயிற்று—ஆக்கமாக மாறிற்று என்க. இதனால் தீது ஒழிந்தது-பாசங்கள் பற்றுக்கள் ஒழிந்தன என்க. 'பாதகமே சோறு பற்றினவா" என்பது கேடும் ஆக்கமும் ஒருங்கே நிகழப் பெற்றன என்பதனை உணர்த்திற்று.

"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்
[காடும்
வித்தகர்க் கல்லால் அரிது"

என்னும்தேவர் திருவாக்கின் உண்மைப் பொருளும் ஈண்டு நோக்கற்பாலது.]

## அப்பர் தேவாரம்

நிறைந்தமாமணலைக்கூப்பிநேசமோ
[டாவின்பாலைக்
கறந்துகொண்டாட்டக்கண்டுகறுத்ததன்
[ருதைதாளை
எறிந்தமாணிக்கப்போதேயெழில்
[கொள்தண்டீசனென்னச்
சிறந்தபேறளித்தார்சேறைச்
[செந்நெறிச்செல்வனாரே.

## திருமந்திரம்

உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி
யறுவகை யானைந் து மாட்டத்தன் றாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே.
(ஷை 2ம் தந்—இலிங்கபுராணம் செ. 5.)

[மணல் கூப்பல்—(முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தலால்)பிருதுவி அம்சமாகிய சரீரத்துள்ள பௌதிகங்களைச் சமம் செய்தல். இவ் உடலம் உணர்ச்சி மயமாதலே சிவலிங்கவடிவ மாக்கல் என்பது.]

## திருமந்திரம்

தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி தானுஞ் சதாசிவ மாய்நிற்குந்
தன்மேனி தற்சிவன் றற்சிவா னந்தமாந்
தன்மேனி தானுகுந் தற்பரந் தானே.
(ஷை 7-ம் தந்—சதாசிவ லிங்கம். செ 21)

உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்று
முணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
யுணர்வுடை யார்க ளுணர்ந்தவக் கால
முணர்வுடை யார்க ளுணர்ந்து கண்டாரே.
(ஷை 7-ம் தந், சம்பிரதாயம் செ 9)

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபு ரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவ
[லிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே.
(ஷை 7-ம் தந்—சிவபூசை செ 1)

உணர்விந்து சோணி யுறவினன் வீசும்
புணர்விந்து வீசுங் கதிரிற் குறையி
லுணர்வு முடம்பு முவையொக்க நிற்கி
லுணர்வு முடம்பு மொருகால் விடாவே.
(ஷை. 3-ம் தந். சந்திரயோகம் செ. 29).

## திருவாய் மொழி

"உணர்வினும்பரொருவனையவனதருளால்
[உறல் பொருட் டேன்
உணர்வினுள்ளே யிருத்தினேனதுவுமவன
[தின்னருளே
உணர்வுமுயிருமுடம்புமற்றலப்பிலனவும்
[பழுதேயாம்
உணர்வைப்பெறவூர்ந்திறவேறியானுந்
[தானாயொழிந்தானே."

"......................................
உணர்வெனும்பெரும்பதந்தெரிந்து
நாடினேன்நாடிநான்கண்டுகொண்டேன்
நாராயணாஎன்னும்நாமம்."

இவற்றால் உணர்ச்சியே சிவம் என்பதும் உணர்ச்சி பூரணப்பட்டால் உடலை விட்டு அவ் உணர்ச்சி (உயிர்—சீவன்) பிரியமாட்டாது என்பதும் நன்று புலப்படுதல் கண்டு கொள்க. நாத விந்துக்கள்—தன்னிலை முன்னிலைகள் ஒன்றுவதே வாய்மையான சிவபூசை என்பதும் அதுவே மெய்யடியார்க்கு உரியது என்பதும் பின்வரும் பிரமாணங்களும் நன்று வற்புறுத்துகின்றன.

## ஔவை குறள்

உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்
தெள்ளியோர் அர்ச்சிக்கு மாறு.

## திருமந்திரம்

ஊதிய மேது மறியா ருரைப்பினு
மோதியு மேது மறியாத வூமர்க
ளாதியு மந்தமு மந்திக்க வல்லிரேல்
வேதிய னங்கே வெளிப்படுந் தானே.
(ஷை. 3-ம் தந். சந்திரயோகம். செ. 20)

நிறை முறையான அருந்தல் பொருந்தல்களாற்றான் தூய உணர்வு—அமல உணர்வு ஆக்கமுற வேண்டும். தன்னிலை முன்னிலைகள் உறவுபடுதலே ஆதியும் அந்தமும் ஒன்றுதலாகிய சந்திவந்தனம் - சந்தியாவந்தனம்-வாய்மையான சிவபூசை என்க. ஆதி அந்தம், நாத விந்து, தன்னிலை முன்னிலை என்பன ஒன்றே. புறத்தே முன்னிலையாகிய இடுகுறி லிங்கத்தில் பூசித்தல் போலியேயன்றி வாய்மையன்று. இடுகுறியாகிய இலிங்கத்தில் செய்யப்படும் இத்தகைய பூசை முதலியன எல்லாம் புண்ணிய சென்மம் ஒன்றில் வாய்மையான சிவ பூசைக்கு அருகராகும் பக்குவம் பெறச் செய்தற்கே உரியவாமன்றி, அவைதாமே நேரே முத்தி வாயிலில் சேர்ப்பிக்கமாட்டா—தாதைதாள் அறவீசும் சண்டியாக்க மாட்டா என்பது வெள்ளிடை மலையாம். பின்வரும் பிரமாணங்கள் வாய்மையான சிவபூசை இன்னது என அதன் அருமை பெருமையையும் புறப்பூசையாகிய போலிப் பூசையின் பெட்பையும் நன்று புலப்படுத்துகின்றன.

## ஞான வாசிட்டம்

வெகுவாயடைந்தபொருள்களிலேமெவித்
[தனது மெய்யுணர்வாந்
தகுநீர் முழுக்கான்மலமற்றுத்தப்பில்
[போதவாசனையால்
மிகுநற்போதவிலிங்கத்தைமேவு பூசை
[செயல்வேண்டும்
பகுதியில்லா இப்போதம்பயிலாதிருக்கும்
[இடமுண்டோ
(ஷை தேவபூசை கதை செ. 42)

["எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"]

(தேவர் குறள்)

என்றவாறு மெய்யுணர்ச்சியால் மனமாசகன்று முன்னிலைகள் யாவற்றையும் நிறைகண்டு பஞ்சீகரணித்து உய்தியடைதலே வாய்மையான சிவபூசை (ஞானபூசை—சகச நிட்டை) என்பதும், அதுவே செயற்பாலது என்பதும், எவ்விடத்தும் எக்காலத்தும் செயத்தக்கது என்பதும் இச் செய்யுளால் நன்று வலியுறுத்தப்பட்டமை கண்டு கொள்க.]

## சித்தாந்த சிகாமணி

இலங்கொளியாகியென்றுமிதயசன்மல
[ரிற்றேன்றி
கலந்தருபரமாநந்த ஞானலிங்கத்தை
[நீங்கிக்
கலந்துளபுறத்திலிங்கக்கருத்துளனாகி
[யுற்றேன்
மலங்குறுபரமமூடனென்னவேமதிக்கப்
[ப்பட்டான்.
(ஷை பிராணலிங்கித்தலம் செ. 4)

## பிரபுலிங்கலீலை

புறம்பு காண்குவன் புல்லியன் ஈசனை
அறிந்த ஞானி அகமுறக் காண்பனால்
எறும்பி காணுறின் கரும்பே கொளும்
செறிந்த ஆடிலை தின்பன என்பவே.
[எறும்பி—யானை]

## திருக்களிற்றுப்படியார்

தம்மிற்சிவலிங்கங்கண்டதனைத்தாம்
[வணங்கித்
தம்மன்பால்மஞ்சனநீர்தாமாட்டித்—
[தம்மையொரு
பூவாகப்பூவழியாமற்கொடுத்துப்பூசித்தால்
ஓவாமையன்றே யுடல்.
(ஷை செ. 44)

[வாய்மையான சிவ பூசையால் நித்தியத்துவம் உளதாதல் இச் செய்யுளால் கூறப்பட்டது. தன்னை ஒரு பூவாக பூ அழியாமல் கொடுத்தல் என்பது மணம் கமழ் தெய்வத்து இளநலம் பெறுதலை உணர்த்தி நின்றது. உடல் ஓவாமை—உடல் நீங்காமை—பிணியல் அடையாமை.]

மேலே காட்டிய பிரமாணங்களால் வாய்மையான சிவபூசை இன்னது என்பதும் அதுவே வாய்மையான பிரமசரிய ஒழுக்கமுடைய மாணிக்கு உரியது என்பதும், வாய்மையான சிவ பூசையாற்றான் உடலின் கண் உள்ள அசுத்த நிறையாகிய தாதைதாள் அற வீசப்படும் என்பதும், புறப் பூசையாகிய போலிப் பூசையாலும் பாலபிஷேகத்தாலும் முன்னிலையாகிய தாதையின் கால்களை வெட்டுதலாகிய மஹாபாதகம் உளுற்றப்பட்ட தென்பது தூலப்பொருளாகிய பொய்ப்பொருளேயன்றி உண்மைப் பொருளன்று என்பதும் நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

ஆன் ஐந்தும் ஆட்டல்:—
விமல தேகத்தில் ஊறும் அமுதம் என்னும் கங்கையால் உணர்ச்சியாகிய சிவலிங்கம் ஆக்கம் பெறுவதாகும். ஆன் ஐந்து—விமலமடைந்த பஞ்ச தநுக்கள்—பௌதிகங்கள்.

## திருமந்திரம்

ஊனூறல் பாயு முயர்வரை யுச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூற லுண்டு தெளிதலு மாமே
(ஷை 3 தந். கேசரியோகம் செ. 6.)

[ஊன் ஊறல்—விமல பௌதிக தநுவில் ஊறுவது. அதுவே வானூறலும் தேனூறலும் ஆம்.] பால் கறத்தல், பாலுண்ணல். பாலூட்டல் என்பன ஒன்றே. ஞானப்பால் என்பதும் இதுவே. இவை சித்தர் பரிபாஷை.

## பட்டினத்தடிகள் பாடல்

அட்டாங்க யோகமும் ஆதாரமாறு மவத்
[தையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப்
[பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூறல் உண்டு
[மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி
[யிருக்கின்றதே.

## இருக்குவேதம்

“..................................அவ்வான
முந்துபாலினேடெங்களையளித்திட
[முறையே
எந்த ஆண்டுமேராளமாயியையகுவோன்
[கறக்க”
(ஷை அஷ்டகம் 3; அத். 8; வருக்கம் 9;
[சூக்தம் 18.)

## இடைக்காட்டுச் சித்தர் பாடல்

### பால் கறத்தல்

சாவாதிருந்திடப்பால்கற—சிவம்
தன்னிலிருந்திடும் பால் கற
வேவாதிருந்திடப் பால்கற—வெறும்
வெட்டவெளிக்குள்ளே பால்கற.

தோயாதிருந்திடும் பால்கற—முன்
தொல்லை வினையறப் பால்கற
வாயால் உமிழ்ந்திடும் பால்கற—வெறும்
வயிறாரவுண்டிடப்பால்கற.

நாறாதிருந்திடும் பால்கற—நெடு
நாளுமிருந்திடப் பால்கற
மாறா தொழுகிடும் பால்கற—தலை
மண்டையில் வளரும் பால்கற.

உலகம் வெறுத்திடும் பால்கற—மிக
ஒக்காளமாகியபால்கற
கலசத்தினுள் விழப்பால்கற—நிறை
கண்டத்தினுள்விழப்பால்கற.

எப்பம் விடாமலே பால்கற—வரும்
ஏமன்விலகவே பால்கற
தீப்பொறியோயந்திடப்பால்கற—பர
சிவத்துடன் சாரவே பால்கற.

அண்ணுவின் மேல்வரும் பால்கற—பேர்
அண்டத்திலூறிடும் பால்கற
விண்ணுட்டிவில்லாத பால்கற—தொல்லை
வேதனைகெடவே பால்கற.

## திருவுந்தியார்

“காயத்துண் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண
[மாட்டாதே
மாயக்கள் உண்டாரென்றுந் தீபற
வறட்டுப்பபசுக்களென்றுந்தீபற”

இவற்றால் இத்தகைய ஞானப்பால் உண்டவர் எமனை வென்று நித்தியத்துவம் பெறுவார் என்பது வெள்ளிடை மலையாம். வாய்மையான பாலபிஷேகம் இதுவே. புறத்தே உள்ள இடு குறியான சிவலிங்கவடிவங்களில் எத்தனையோ பலர் பாலபிஷேகம் செய்கின்றனர். இவற்றால் அவர்கள் நித்தியத்துவம் பெறுகின்றார்களா? உலகியலாகிய கிரியைகள் எல்லாம் உண்மையான சாதகங்களைக் குருவருளால் அடையச் செய்யும் அவ்வளவிற் பயன் படுவனவேயன்றி அவை தாமே சீவர்களை நேரே முத்திவாயலில் சேர்ப்பிப்பன ஆகா. ஆதலால் கற்பனைகளையே உண்மை என அமையாது அவற்றால் உண்மையை நாடி உய்தி பெறுதலே வேண்டற்பாற்று. இத்தகைய பாலை உண்டு சூக்கு

மத்தை விளைவேற்றுதற்கு நமது உடலுள் அசுத்த நிறையாகி அமைந்துள்ள தாதைதாள் தடையாகியுள்ளது. அது வீசப்படவேண்டும். அசுத்தம் நீங்கிய விமலவல்லியாகிய—விமல தேகமாகிய சத்தியே இப்பாலை அளிக்கவேண்டும். இயற்கை முறை இதுவே. இந்த விமல தேகத்தில் ஊறும் அமுதமே—பாலே பொற்கிண்ணத்து அடிசில். இது ஞான மயமானது—ஞானம் அளிப்பது. இவ்வுண்மையையே எம்பெருமான் ஞானசம்பந்தன் பின்வருமாறு அருளிச் செய்தனன்.

### ஞான சம்பந்தர் தேவாரம்

போதையார் பொற்கிண்ணத்தடிசில்பொல்
[லாதெனத்
தாதையார்முனிவுறத்தானெனையாண்—
[வன்
காதையார்குழையினன்கழுமலவளநகர்ப்
பேதையாளவளொடும் பெருந்தகை யிருந்
[ததே.

(ஷ திருக்கழுமலம் பண்-கொல்லிசெ. 2)

போதை—போதம்—ஞானம். விமல வல்லியாகிய அம்பிகையே—விமல தேகமாகிய பொன் தேகமே—ரக்ஷக தேகமே இத்தகையபாலை அளிப்பதால் "பொற்கிண்ணம்" எனப்பட்டது. கழுமலம்—மலத்தைக் கழுவும் பால் ஊறும் இடம். கழுக்குன்றம் அண்ணாமலை என்பனவும் இதனையே குறிப்பனவாகும்; அள் + நா + மலை = அண்ணாமலை. உள் + நா + முலை = உண்ணாமுலை. இப்பாலை உண்ணுதற்குத் தடையாயுள்ளது தாதைதாள். இதனைச் சிதைத்தமையே "தாதையார் முனிவுறத்தான் எனை ஆண்டவன்" என்பதனால் குறிக்கப்பட்டது. தன் சரீரத்துள்ள தாதைதாள் அற வீசினவர்க்கே பொற்கோயிலாகிய இரக்ஷக தேகமும் பால் என்னும் அமுதமாகிய வாய்மையாகிய போனகமும் சிவப்பிரசாதமாய்க் கிடைக்கப் பெறும் என்பது பின்வரும் திருவாக்காலும் நன்று புலப்படுதல் கண்டு கொள்க. பாதகம் என்னும் கற்பனைக்குப் பரிசு இவையே என்க.

### சேந்தனார் திருப்பல்லாண்டு

"தாதையைத் தாளற வீசிய சண்டிக்கும்
அண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயி
[லும்
போனகமும் அருளிச்
... ........................................."

(ஷ செ. 10)

அண்டம் வழங்கியது என்பது அமல முதற்படிகண்டு எம் பெருமானுக்குப் பிள்ளையான மெய்யடியான் மூவுலகும் கோலோச்சுவன் என்னும் வேத உண்மையை உணர்த்தி நின்றது.

"நீணுலகெலாம் ஆளக்கொடுத்தவன்"

என அப்பர் அருளியதும் அறிக. பொற்கோயில்—ரக்ஷகதேகம்—இடப தேகம். இதுவே மால்விடை. "புயல் வணற்கருளிப் பொன் நெடுஞ் சிவிகையா ஊர்ந்த மேக நாயகனை" என அருளிச் செய்யப்பட்டதும் அறிக. (ஷ திருவிசைப்பா செ.1) மேக நாயகன் — மழை வடிவன்— அருள் வடிவினன். போனகம்— அமுது—ஞானப்பால். நித்தியத்துவம் அளிக்கும் இத்தகைய வாய்மையான போனகம் மதி முயற்சியால் அடையப்படுவது. "போனகப் என்பது தான் உழந்து உண்டல்", என ஔவையார் அருளியதும் அறிக (கொன்றைவேந்தன்) உழப்பு—முயற்சி. தான் உழந்து உண்டல்-- "தானே தனக்கு இகல் உறவு எனத் தேர்ந்து, மேன்மேல் கிளர்வொடு செந்நெறி" (மூவடி முப்பது) யில் சென்று--குருநெறி கடைப்பிடித்து மதிவைராக்கியத்தோடு முயன்று அடைதல். பிறர் சமைத்து உண்ணும்படி ஏவாமல் தனது மதி முயற்சியால் இயற்கை முறையான் அடையப்படும் வாய்மையான உணவு—அழி பசி உறு பசி என்பன ஒழித்து நித்தியத்துவம் அளிக்கும் வாய்மையான உணவு இதுவே என்க.

"...தனைப்பிறர்ஏவாமல்உண்பதே ஊண்"

என ஔவையார் அருளியதும் அறிக. பிரணவ அமுதம் இதுவே. இதனூற்றூன் ஓ வடிவம் உளதாகும். பின்வரும் பிரமாணம் இதனை நன்று புலப்படுத்துகின்றது.

### சுத்த சாதகம்

"பிரணவவமுதேபுசித்தநுதினமும்
பிரணவ மயமதே யாகி
மாரணமதுறுமிம்மனிதரைப்போல
வடிவுமாத்திரமேதோன்றிப்
..........................................."

(ஷ செ. 81.)

மெய்யடியாரெல்லாம் இத்தகைய அமுதம் என்னும் ஞானப்பால் உண்டே நித்தியத்துவம் பெற்றவராவர். இதுவே இறைவன் வடிவம் "என்னனை என் அரையன் இன் அமுது என்று எல்லோமும் சொன்னோம் கேள்" என்பது திருவாசகம் (திருவெம்பாவை.) இத்தகைய அமுதமே—பாலுணவே-பாலபிஷேகமே. "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய சிவம் என்னும் செம்பொருளுக்கு உரியது—செம்பொருளை ஆக்கமுறச்செய்வது. ஆனைந்தும் ஆட்டல் -- பஞ்சகவ்வியம் எனப்படும். விமல பஞ்ச பௌதிகங்களால் ஆய அமுதம் உண்ணல் என்பதன் உண்மைப் பொருள் இதுவே என அறிக. உலகியலிலும் சுத்தியின் பொருட்டுப் பஞ்சகவ்வியம் உட்கொள்வர். புண்ணியாகவசனம் கூறுவர்.(புண்ணிய அகவசனம் = பாவம் சுத்தியாதற் பொருட்டு-நீங்குதற் பொருட்டுக் கூறப்படும் வாக்கியம் என்ப. அகம்—பாவம். புண்ணியம்—சுத்தி—அமலம்.)

தாதைசெறுவகைசெய்துசிதைத்தல்:-

தாதை என்பது அசுத்தமான ஆகாச பூதம். இதினின்றும் இழிந்த--விரிந்த சுக்கிலமானது வியாபகத்தால் அசுத்த பௌதிக நிறை அமைந்தது. இவ்விந்துவில் நாலுகலைகளுள் பூ நீர் என்னும் இரண்டு கலைகளும் காமம் கோபம் முதலிய தீயகுணங்களுக்கு உறை விடமாயுள்ளன—சர்வ விக்கினங்களுக்கும் காரணமாயுள்ளன. நிறை

முறையான இல்லற ஒழுக்கத்தால்—அருந்தல் பொருந்தல்களால் விந்துவில் உள்ள அழுக்கை—ஓதத்தை நீறச் செய்தலே தாதைதாள் அறவீசல் என்பது. இவ்விந்து சாந்தம் பெற்றால்-இரண்டு கலைகளும் உடலோடு உறைந்தால்-சமப்பட்டால்—உடல் உயிர் ஒழிவற ஒன்றிச் சமப்பட்டால் சர்வவிக்கினங்களும் நீங்கும்—விக்கின விநாயகப்பேறு உளதாகும். விக்கினங்களை (வி=) அழகு படுத்தும் பேறு விக்கின விநாயகப் பேறு என்க. "காய்ச்சிப் பதஞ் செய்தல்" என்பது அழுக்கை-அழுக்கு என்னும் கனத்தன்மையை — பொறையைச் சிதைத்தல்.

"தமிழ்நாடு" என்னும் தினசரிப் பத்திரிகையில் 20-7-1919 இல் வெளிவந்த ஒரு விஷயம் இயைபு பற்றி இங்கே காட்டப்படுகின்றது.

"விதியை வெல்லலாமா"?

"மதியின் வன்மை"

"..............................................

...ரஸல் எழுதுகிறார்:— மானிடரை
"மதம் பிடித்தவராகவோ அல்லது
"பயங் கொள்ளிகளாகவோ அதிக
"காம இச்சை பிடித்தவர்களாகவோ
"அல்லது அதை மட்டாக உடைய
"வர்களாகவோ மாற்றிவிடலாம் என்
"கிறார். மனிதனது குண வித்தியாசங்
"கள் எல்லாம் விந்துவின் இயற்கை
"யைப் பற்றியதென்றும், "இஞ்சக்
"ஷன்" (Injection) மூலமாக விந்து
"வைப் பதப்படுத்தி மனித குணங்
"களை இஷ்டம்போல் கட்டுப்படுத்தி
"திருப்பமுடியும்' என்கிறார்...........
"..............................................
"நமது தலை விதிக்காகக் கடவுளைத்
"தூஷித்துப் புலம்புவது எவ்வளவு
"ஆபத்தானதென்று ஒவ்வொரு
"நாளும் தெளிவாக நாம் அறிகிறோம்.
"மனிதன் விதியை சிருஷ்டிக்க முடி
"யாது போனாலும் அதை மாற்ற
"முடியும் என்பது உண்மை ("ஆன்ட்
ரிமாராய")

இவற்றால் பெறப்படுவது யாது? நமது உடலமே வீடு பேற்றிற்குக் காரணம்— வீடாகிய பதி என்பதும், அதன்கண் அமைந்த இந்திரியத்தை —அம்பரதரமாய் விரிந்த சுக்கிலத்தை நிரோதம் செய்தலால்—பதப்படுத்துதலால்— அழுக்கை அகற்றிச் சலனமின்றி உடம்போடு உறையச்செய்தலால் உபசாந்தம் பெறச்செய்தலால் சர்வ விக்கினங்களும் நீங்கி நித்தியத்துவம் உளதாகும் என்பதுமே ஆம். பின்வரும் பிரபல சுருத்திப்பிரமாணம் இவ்வுண்மையை நன்று புலப்படுத்துகின்றது.

## திருமந்திரம்

ஒன்றுண்டுதாமரை யொண்மலர் மூன்றுள
தன்றாதை தாளு மிரண்டுள காயத்து
ணன்றாகக்காய்ச்சிப்பதஞ்செய வல்லார்கட்
கின்றேசென் றீசனை யெய்தலு மாமே.

(ஷை 8ம் தந். அடிதலையறியுந்திறங்கூறல் [செ.8)

தாமரை என்பது ஆகாசம் "ஆகாசம் எதுவோ அதுதான் கமலம்" என்பது மைத்திராயண்ணி உபநிஷத். (பிரபாடகம் 6.) உடலில் உள்ளது இருதய கமலம்—தகராகாசம். மலர் மூன்று—இடைகலை, பின்கலை, சுழிமுனை.

"என்னிடைக் கமல மூன்றினுள்தோன்றி
எழுஞ் செழுஞ் சுடரினை"

என்பது சேந்தனார் திருவிசைப்பா. தாதைதாள் இரண்டு-பிராணன் அபானன். இவை இரண்டும் சமப்படுதலாற்றான் விந்துவின் கலைகள் சமப்படும். பிராண அபாந நிரோதமே இந்திரிய நிரோதமும் ஆம். இவ்வாயுக்கள் கனத்தன்மை உடையன; தடித்தல் உடையன; ஆதலால் அசுத்த முடையன. வாயு சுத்தம் அடைய அடைய தடித்தல் சாதலுறும். ஒரு பொருளைத் தனக்கு அதிகமாக வேண்டும் என்று கேட்பவன் "எனக்கு இந்தப் பொருளைக் கனமாகக் கொடுங்கள்" என்பன். அஃதாவது அதிகமாக—பெரும்பாகத்தைக் கொடுங்கள் என்பது பொருளாகும். இது தமிழ் நாட்டு வழக்கு. ஆனால் உருவத்தால் சிறிதாயும் நிறையால் பெரிதாயும் இருக்கும் பொருளை "இது ஊட்ட முடையது; அதிக ஊட்டமாய் இருக்கிறது" என்ப. இதுவும் தமிழ் நாட்டுச் சொல் வழக்கு. ஆதலால் த்டித்தல் என்னும் சொல் அதிகம் என்பதையே குறிக்கும்; உருவத்தால் கனமாயிருப்பதை-அதிகமாகத் தோன்றுவதைக் குறிக்கும். வாயு அசுத்த முடையதாயின் உருவத்தால் பெருமையும் நிறையால் சிறுமையும் உளதாகும். அசுத்தமான வாயுவுக்கு உப்பும்தன்மை—பெரிதாகக் காட்டுந் தன்மை-விரியும் தன்மைஉண்டு. அவ்வாயு சுத்தம் அடைய அடைய் சுருங்கும்தன்மை பெற்றுக்கனமாக ஊட்டமாக இருக்கும். வாயு சுருங்குவது என்றால் என்னை? அதுதான் அளவிறந்த அசைவுகள் குறுகுவது—நிறைபெறுவது என்பது. பக்கம் கொண்டு படர்ந்துகெதிபெறுவதே வாயுவின் இயல். ஆதலால்வாயுவானது அக்கினியோடு கூடிக்குழைந்து அதனோடு பூரணமித்திருத்துவம் அடைந்தபோது அவ்வாயுவின் பஞ்சீகரணிப்பால் அக்கினியானது அதனைத் தன் வசமாக்கிப் பக்கச் சலனகதி என்னும் வாயுவின் இயற்கையை மாற்றி மேல் எழும்; எழுந்து—கிளம்பி ஆகாயத்தானமான லலாடத்தை பற்றும்; சுழிமுனையைத் தாவிக் கெதிபெறும்; அக்கினி ஆதிக்கம் பெறும் என்க. அக்கினி சிவம் ஆகவும் வாயு சத்தியாகவும் திகழும். இதுதான் ஈறு. அஃதாவது மறையும் நிலைமை பெற்றவருடையுதன்மை இதுவே என்க. இது பற்றியே

"நன்றாகக் காய்ச்சிப் பதஞ்செய்ய வல் [லார்கட்(கு)
இன்றே சென்றீசனை எய்தலும் ஆமே"

என அருளிப் போந்தனர் எம் அண்ணல் என அறிதற்பாற்று. இனி தாதைதாளை பூரீர் என்னும் இரண்டு கலைகள் என்றது என்னையோ? எனின், இவற்றில் ஆதிக்கம்

பெற்று நின்று அமலம் பெறுதலால் இவற்றைச் சமப்படுத்துவது வாயுவே ஆதலால் என்க. பிராணன் அபானன் என்னும் இரண்டும் அசுத்தம் நீங்கி அமல மடைந்து சமப்படுதலே பூவும் நீரும் சமப்படுதலும் ஆம். இருவினை ஒப்பு என்ற அத்தியாயத்தில் அக்கினியையும் நீரையும் வாயு சம நிறையாகப் பரிசிக்கும். பூவும் நீரும் ஒருபுறமாகவும் காலும் வானும் ஒரு புறமாகவும் அமைதலே இருவினை ஒப்பு ஆம். பிராணன் அபானன் என்பன அமல மடைந்து சமப்படுதலால் சிவம் என்னும் அமல அக்கினி ஆதிக்கம் பெறுதலைப் பின்வரும் பிரமாணமும் நன்று புலப்படுத்துகின்றது.

### சித்தாந்தசிகாமணி

தயங்குறுபிராணபாநசமநிலைபெறலான்
[மூலத்
துயர்ந்தெழுசோதியாதல் வெளி மீது
[சோதிநானே
வயங்குறுபிராணலிங்கமென்னவேவகுக்
[கப்பட்ட
தியங்குறுபிராணபாநநிரோதிகளென்
[போர்தம்மால்
(ஷை பிராணலிங்கித்தலம் செ 1.)

[பிராண அபாந நிரோதிகள்—பிராணனையும் அபானனையும் அமலமாக்கிச் சமப்படுத்தியவர். இந்திரிய நிரோதஞ் செய்தவர் எனினும் ஆம். பிராணன் அபானன் என்பனவே கொடிநிலையும் வள்ளியும் எனப்பட்டன. (வித்தகம் இல 35 இல் "பாசு பதம்" என்னும் கட்டுரையை நோக்குக]

"மறுமழுவால்வெட்டி மாலை பெற்றது":—மழு என்பது தீக்கையை உணர்த்தி நின்றது "கைத்தாழ் கொண்டுஆரும்திறந்து அறிவாரில்லை" (திருமந்திரம்)என்பது காண்க. "செம்பொன் உலக்கை வலக்கைபற்றி" (திருவாசகம் திரும்பொற் சுண்ணம்) என்பதும் இது. மாலை என்பது சிவப்பிரசாதமாகிய சிவஞானத்தைக் குறிப்பதாகும்.

மெய்யடியார் எல்லாம் இத்தகைய பேற்றினை அடைந்தவரே யாவர். இவர் அடையப் பெற்ற தீக்ஷா நாமங்கள் எனப்படும் திருநாமங்கள் எல்லாம் ஒரே உண்மையையே உணர்த்தும் பெயர்களாம். சண்டி என ஒருவர் சிறப்புறக் கிளந்து கூறப்படினும் மெய்யடியார் எல்லாம் தாதைதாள் அற வீசிய சண்டிகளேயாவர். ஒருவரையே தண்டி எனவும் சண்டி எனவும் தத்துவப்பெரியார் கூறுகின்றனர்; மாணி எனவும் கூறுகின்றனர். மாணி என்னும்சொற்குப் பொருள் என்னை? மாணி என்றால் பிரமசாரி என்கின்றனர் உலகோர். மாணி என்னும் சொல்லுக்குத் தற் காலத்தவர் கண்டுபிடித்த கொள்கைகளையே அகத்தடக்கி மிளிரும் "பிரமசாரி" என்பதே பொருளாயின், தகப்பன் தாளைச் சிதைத்த மாபாவி என்பதை விளக்கிக் காட்ட வந்த அவசரத்தில் அக்கொலைஞனைப் "பிரமசாரி" என்னும் நாமத்தால் கூறியதன் காரணம் என்னோ? பயன் தான் என்னோ? அறிகிலேம். பாதகத்தை விளக்கிக் காட்டுவதற்குப் பிரமசரிய முடையான் அக்கொலைஞன் என்று அநாவசியமாகக் கூறுதல் பொருத்தமுடையதாகுமா? "மாணிக்குயிர்பெறக் கூற்றை உதைத்தன......" எனவும் "மாணியாய் மண் அளந்தவன்" எனவும்(அப்பர் தேவாரம்) மாணி என்னும் சொல் வழங்கப் பட்டுள்ளது. ஆழ்வார்கள் அருளிய பிரபந்தத்திலும் "மாணி" என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. தீக்கை உடையவனே மாணி. தீக்கை உடையவனே காயத்துள் விளங்கும் தாதை தாளைச் சிதைக்க வல்லனவன். இவனே வாய்மையான பிரமசாரியும் ஆம். வாய்மையான பிரமசரியம் இன்னதென்பது "வித்தகம்" இல 26 இல் விளக்கிக்கூறப்பட்டது. ஆங்குக் காண்க. தீக்கை இல்லாதவன் தாதைதாளைச் சிதைக்க முடியாது. முடியாதபோது சுவேதாசுவதர உபநிடதம் கூறுவதற்கு ஒப்ப புருஷனுடைய மத்தக மூலத்தே "மத்திஷ்கம்" எனப் பெயரிய பாகம் அமலம் பெறுமோ? பெறாது. பெறாவிடின் சூக்கும சரீரம் வினைவேறாது. சூக்குமம் வினைவேறப் பெறாதவன் அறம் பாவம் என்னும் கட்டினின்றும் விடு படமாட்டான். ஒவ்வொருவரும் தூலத்துக்கு வித்தாய் இருந்து அதனை விளங்கச் செய்யும் சூக்குமத்தை வினை வேற்ற வேண்டும். சூக்குமம் வினை வேறவே — அமலமடையவே, தூலமும் வினைவேறும்— அமலமடையும். இதனாற்றான் பாசங்கள் பற்றுக்கள் நீங்கும் — விதிவெல்லப்படும்—நித்தியத்துவம் உளதாகும் என்பதே வேத உண்மையும் ஆம்.

முப்புரதகனம் அமிர்த மதனம் என்பனபோலவே தாதை தாளற வீசல் என்பதும் அரிய பெரிய தத்துவத்தை உணர்த்தும் நிறை முறையமைந்த உண்மைக் கற்பனையே ஆகும். சண்டேசுரர் வரலாறு என்று பெரிய புராணத்தில் ஒரு கதை கூறப்பட்டுள்ளது. தத்துவப் பெரியார் கண்டு கொண்டு அநுபவமாகக் கூறிய உண்மைக்கு ஒப்ப அக்கதை பொருத்த முடையதாகத் தோன்றவில்லை என்பது அக்கதையின்கண் நிகழும் ஐயங்களால் வெள்ளிடையாகின்றது. நால் வகை வருணங்களும் உண்மை நிலையிலும் உலகியலாகிய போலி நிலையிலும் உண்டு ("கற்பனை" என்னும் கட்டுரையை நோக்குக. "வித்தகம்" இல 39) பட்டாங்கு (உலகியல்) என்றும் ஒப்ப நிகழ்தலால் உலகியற் சாதியாளர்கள் பண்டைக்காலத்துந்தான் தற்காலத்துந்தான் ஒரே தன்மையினரே ஆவர். இவ்வாறன்றிப் பண்டைக்காலத்து அந்தணர் எல்லாம் அந்தத்தை (நாதாந்தம்) அணவியவரே எனின், அவரெல்லாம் பரம கருணா மூர்த்திகளாய் இருந்திருப்பார் என்பது மிகையன்று. இவ்வாறாக, பசுக்களை மேய்த்துக்கொண்டு திரிந்த சிறுவன் ஒருவன் (சூத்திரன்) அப் பசுக்களின் பாலைக்களவாண்டு அதனைத்தான் பருகாமல் மண்ணால் சிவ

லிங்கம் ஒன்று அமைத்து அதற்கு அப்பாலினால் அபிஷேகம் செய்வது கண்ட அந்தணர் அவன்மேல் குற்றம் காணத்துணிவரோ? ஒருபோதும் துணியமாட்டார். அவர்கள் பரம கருணாநிதிகளாதலால் அச்சிறுவன் செயலைக்கண்டுவியப்புற்றுக் களிகூர்ந்து அவனைப் போற்றி ஆசீர்வதிப்பர். அவர்கள் போலி அந்தணர்கள் எனின், அச்சிறுவன் செய்கையைக் கேள்வியுற்ற அக்கணமே அவன் இருக்கும் இடம் சென்று அவனை அடித்து இடித்துத் துன்புறுத்தியிருப்பார்கள். அவன் தகப்பனிடம் முறையிட்டு அவனால் அவன் மகனைத் தண்டனையடையும்படி செய்தார்கள் என்பது பொருந்தாக் கற்பனைக் கூற்று. மாடு மேய்ப்பவனுக்கும் அவன் தகப்பனுக்கும் பார்ப்பனர் இத்துணை மரியாதை அளித்தனர் என்பது எக்காலத்தும் எவ்வாற்றானும் ஒப்பத்தக்கதன்று. ஆதலால் புராணிசர் இன்மையுடையவரே—வெறுமையுடையவரே எனக் கூற ஆமோ? எனின், அவர் உலகியல் நோக்கி அதற்கு ஒப்பவே புராணம் யாத்தனராதலின் அவர்க்கும் அஃது உண்மையில் கருத்தன்றுபோலும் என்றே கொள்ளற்பாற்று. பௌராணிகர் திருவுளப்பான்மை இன்னதென்பது "வித்தகம்" இல 34 இல் "பணிசெய்து கிடத்தல்" என்னும் கட்டுரையில் நன்று விளக்கிக் கூறப்பட்டது. ஆங்குக்காண்க. பௌராணிகர் கூற்றினால் கற்பனை பொய்த்ததேயன்றி அதன் தத்துவம் பொய்க்கவில்லை. ஆனால் உண்மையை உள்ளவாறே உணர்ந்த மெய்யடியார் திருவாய் மலர்ந்தனவற்றை உற்று நோக்குழி உண்மை புலப்படாதோ? எனின், அவர்களும் உண்மையை உண்மை அமைந்த நிறைமுறையான கற்பனை ரூபமாகவே அருளினராதலால் அத்தத்துவத்தை அறியாதார் அவற்றிற்குப் பொருள் காண்பது முயற்கொம்பேயாகும். தாதைதாள் அறவீசல் என்பது போலவே கண்ணப்பல் காலாட்டல் முதலியனவும் அரிய பெரிய மறைகளைத் தம் மகத்துக் கொண்ட பரிபாஷைகளாம். கண்ணப்பல், கண்புதைத்தல், முகத்திற்காலால் உதைத்தல், போன்முடி சூடல் என்பன ஒரு பொருட்கிளவி. இவற்றின் உண்மை அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

தாதை தாளை "நன்றாகக் காய்ச்சிப் பதஞ்செய்தல்" என்பதற்கு முன்னிலையில் விளங்கும் தகப்பனுடைய கால்களை வெட்டுதல் என்றே தூலப் பொருள் காண்பார் பலர். சகச நிட்டையாளராய் ஒப்புரவொழுகும் மெய்யடியார் முன்னிலைகளை நிறைமுறையோடு உறவுபடுத்துபவரேயன்றி முன்னிலையில் விளங்கும் தகப்பனுடைய கால்களை வெட்டுவார்களா? இது மகா பாதகச் செயல் அல்லவா? இத்தகைய மாபாவிக்குச் சிவப்பிரசாதம் கிடைத்தல் முயற்கொம்பே என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? இக்கற்பனை தத்துவார்த்தம் உடையதேயன்றி உண்மையில் நிகழ்ந்தது எனக் கூறப்படுவதன்று. தாதை தாள் அறவீசப்பட்டபோதுதான் சரீரம் அமலமாகும் — காயப்பெண் விமலவல்லியாவள். இத்தகைய விமல காயத்தால் அடையும் இன்பமே வாய்மையான இன்பம்—பேரின்பம். இவ்விமல காயப்பெண்தான் "மா" எனப்பூத்த பெண். இவ்விமல காயம் உடையவனே "மா" எனப் பூத்தவளைக் கூடிச் சுகிக்கும் பிள்ளை—மாப்பிள்ளை—மாப்பிள்ளை. இவனுக்கே எம்பெருமான் பூரண கிருபை வழங்குவன். இவனே மெய்யடியான். எம்பெருமானுக்குப் பிள்ளையான இடம் இதுவே. தந்தையைக்கொன்று தாயைக் கூடினவனுக்கு மதுரைச் சொக்கலிங்கேசர் பூரண கிருபை வழங்கினார் என்னும் புராணக் கற்பனையின் உண்மைப் பொருள்—தத்துவார்த்தம் இதுவே என அறிக. அன்றி உலகியலாக, பெற்றுவளர்த்த தந்தையைக் கொன்று (ஐயையோ!) பத்து மாதஞ் சுமந்து பெற்றுவளர்த்துத் தாலாட்டி வளர்த்த தாயைக் கூடிய மா மா மா பாவி தண்டனையடையாது (எத்தனை கோடி நரக சென்மம்?) உடனே கடவுள் அருளைப் பூரணமாகப் பெற்றுவிட்டான் என்றால், இதனினும் மிக்க பித்தலாட்டம்-விபரீதம் வேறுமுண்டா? இத்தகைய மாபாதகம் அரிய பெரிய சைவ சமயத்துக்கு உரியதாகுமா? ஆதலால் கற்பனைகளுக்குத் தூலப் பொருள் கண்டு இடர்ப்படாது அவற்றை நன்று பரிசீலனை செய்து அவற்றின் பெற்றியை ஓர்ந்து திருவருளை நாடி உண்மைப் பொருள் கண்டு உய்தியடைவதே முறையாம் என்க.

இது காறும் கூறியவைகளால் தாதை தாளைச் சிதைத்த சண்டி என்பதன் தத்துவார்த்தமும் சண்டேசுரப் பேற்றின் மாண்பும் ஒருவாறு உணரத்தகும். சாதலடையும் வல்லபம் பெற்ற சீவராகிய நாம் தாதைதாள் அறவீசி இத்தகைய சண்டேசுரப் பேற்றினை அடைந்து சிவப்பிரசாதம் பெறுதல் எளிதின் முடிவதன்று; அரிது அரிது மா அரிது என்றே கூறப்படும். நாம் எல்லாம் சவசண்டிகள் ஆதலால் சைவ சண்டியைக் காண்பது முடியாத காரியமே.

சுபம்


## "வித்தகம்"

### வருடசந்தா

முன்பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.


## அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்

Sandbanam Printing Works, Pondicherry, Le Gérant R. Nagarattinam